

அரசு சேவைகளை மக்களின் இல்லங்களுக்கு உடனுக்குடன் சென்று சேர்த்திடும் வகையில் தொடங்கப்பட்ட "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் தொடர்பாக, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி வாயிலாக ஆய்வு மேற்கொண்ட நிலையில், நேற்று (30.08.2025) தொடர்புடைய துறை அலுவலர்களுடன் நடைபெற்ற உயர் நிலை ஆய்வுக் கூட்டத்தில், இத்திட்ட முகாமில் பெறப்படும் மனுக்களுக்கு உடனடி தீர்வு காணப்படுவதை உறுதி செய்திட அறிவுறுத்தினார். இந்த ஆய்வுக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சிறப்பு திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பெ. அமுதா, மற்றும் தொடர்புடைய அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்கள் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம் அறிஞர் அண்ணா அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் இணைத்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் அமைச்சர்கள் ஆவடி சா.மு. நாசர், அமைச்சர் சி.வி.கணேசன் வேலைவாய்ப்பு முகாமை தொடங்கி வைத்து பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள் உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ., மாவட்ட பொறுப்பாளர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், நகர செயலாளர் ஜி.ஆர்.திருமலை, நகர்மன்றத் தலைவர் காஞ்சனாசுதாகர், துணை தலைவர் க.ஸ்ரீதர், இர.தேவேந்திரன், விஜயா, ரவிச்சந்திரன் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளனர்.

# கும்மிடிப்பூண்டி - எல்லாபுரம் ஒன்றியத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்!

## ஊத்துக்கோட்டையில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் ! டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ.பங்கேற்பு!

திருவள்ளூர், ஆக. 31-

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி தொகுதி கும்மிடிப்பூண்டி ஒன்றியத்தில் பூவலம்பேடு ஊராட்சி பூவலம்பேடு தொடக்கப்பள்ளியில் பூவலம்பேடு, ஜி.ஆர்.கண்டிகை, கொள்ளானூர், பெரியபுலியூர் மற்றும் எல்லாபுரம் ஒன்றியம் மஞ்சங்காரணி ஊராட்சி, சமதாயக் கூடம் பனையஞ்சேரி, ஆமிதாநல்லூர், அக்கரைப்பாக்கம், திருநிலை, மதுரவாசல், மஞ்சங்காரணி மேற்கண்ட இரு ஊராட்சிகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் பட்டா மாறுதல் பட்டாவில் பெயர் மற்றும்பரப்பு திருத்தம் சிறு/குறு விவசாயி சான்று முதியோர் உதவித்தொகை விதவைத உதவித்தொகை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தில் உறுப்பினராக சேர மனுக்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை பராமரிப்பு உதவித் தொகை சுயதொழில் கடனுதவி மனுக்கள் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையில் முதலமைச்சர் பெண் குழந்தை பாதுகாப்பு திட்டம் ஆதரவற்ற குழந்தைகளுக்கான நிதி ஆதரவுத் திட்டததின் மனுக்கள் வேளாண்மை உழவர் நலத்துறையில் வேளாண்மை இயந்திரங்கள் கருவிகள் மானியம் மனுக்கள் சிறப்பு திட்ட செயலாக்கத்துறையில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை தகுதியுள்ள / விடுபட்ட மகளிர்களின் மனுக்கள் ஆகிய துறையில் பெறப்பட்ட மனுக்களை அந்தந்த துறையில் உள்ள அரசு அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு உடனடியாக பொதுமக்கள் கோரிக்கைளை நாட்களுக்குள் நிறைவேற்றிட வேண்டி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட முன்னாள் மாவட்ட செயலாளரும் தலைமை செயற்குழு உறுப்பினரும் கும்மிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் கேட்டுகொண்டார். 45

நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் ஊத்து கோட்டை அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. இந்த முகாமில் நலம் காக்கும் திட்டத்தின் கீழ் மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மைக் காப்போம் 48, நலம் காக்கும் ஸ்டாலின் என்னும் முழு உடல் பரிசோதனை திட்டம்ஆகியதிட்டத்தின் கீழ் பரிசோதனை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மு. மணிபாலன், எஸ்.ரமேஷ், ஆ.சத்தியவேல், ஜான்(எ) பொன்னுசாமி, அப்துல்ரஷீத், கோல்டுமணி, டி.சங்கர், பா.பரத்குமார், கே.வி.நாகராஜ், ஸ்ரீராமுலு, டி.சீனிவாசலு, ஆர்.தில்லைகுமார், கே.விஜயன், கே.பாபு, மு. தமிழ்செல்வன், டி.ராமராவ், கே.வி. வெங்கடாச்சலம், சு+.உதயச+ரியன், அக்கரை ரஞ்சித், முனிநாதன், பி.கே. நாராயணசாமி, ஏ.லோகேஷ், டி.தினேஷ், அமுல்ராஜ், ரஹீம், ஆர். கஜேந்திரன், எம்.செந்தில், உதயகாந்தம்மாள், லால், மனோஜ், பார்த்திபன், முத்து, கே.என்.பழனி, தியாகராஜன், கோபால், சித்ராபாபு, பிரபாகரன், பாஸ்கர், நாகபூஷனம், கோகுல்கிருஷ்ணன், ஜீவா, திரிபுரசுந்தரி, அருண், பாண்டியன், பாபு, எஸ்.என்.சாய்குமார், பாருக்பாய் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தமிழச்சி தங்கப்பாண்டியன் தொகுதி மேம்பாட்டு நிதி

# ரூ.80,65,000 மதிப்பீட்டில் மீன் மார்க்கெட்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை, ஆக 31-

தென்சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட, சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி, மண்டலம் 14, வார்டு 181, கிழக்கு கடற்கரை பிரதான சாலை, கொட்டிவாக்கத்தில், தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.80,65,000 மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன் மார்க்கெட் கட்டடத்தினை, சென்னை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப் பாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அரவிந்த் ரமேஷ், சென்னை மாநகராட்சி தெற்கு வட்டார துணை ஆணையர் அப்தாப் ரசூல் இ.ஆ.ப, பகுதிச் செயலாளர்கள் மண்டலக்குழுத் தலைவர்கள் மதியழகன், ரவிச்சந்திரன், பெருநகர சென்னை மாநகராட்சி கல்விக்குழுத் தலைவர் பாலவாக்கம் விஸ்வநாதன், மண்டல 14 அலுவலர் சுரேஷ், மாவட்ட துணை செயலாளர் பாலவாக்கம் மனோகரன், வட்டச் செயலாளர் சாந்தப்பன், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் அருண்குமார், பார்த்திபன், பரிமேலழகர், கழக நிர்வாகிகள், முன்னணியினர், மாநகராட்சி அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

போக்குவரத்து நெரிசல் மிகுந்த கொட்டிவாக்கம் கிழக்கு கடற்கரை சாலையில் சாலையோரம் மீன்கள் விற்பனை செய்வதால் பொதுமக்களுக்கு சிரமம் ஏற்படுவதாகவும், போக்குவரத்து பாதிப்பு ஏற்படுவதாகவும், அப்பகுதி மீனவர்கள் தென்சென்னை எம்.பி தமிழச்சி தங்கபாண்டியனிடம் தெரிவித்து மீன்கள் விற்பனை செய்யும் வகையில் மீன் மார்கெட் கட்டித்தருமாறு கேட்டுக் கொண்டனர்.

அதன்படி, தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து மீன் மார்கெட் கட்டப்பட்டுள்ளது.

இரண்டு தளங்களில் சுமார் 48 மீனவர்கள் அமர்ந்து மீன் விற்பனை செய்யும் அளவிற்கு இந்த மீன் மார்கெட் கட்டப்பட்டுள்ளது. மீனவர்களுக்கு தேவையான தண்ணீர், கழிவறை வசதியும் அமைக்கப்பட்டுள்ளது.

## காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட முன்னாள் அவைத் தலைவர்

# சி.வி.எம்.அ.பொன்மொழி 8 ஆண்டு நினைவு நாள்!

## சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எம்.ஏ. உணவு வழங்குகிறார்!

காஞ்சிபுரம், ஆக. 31-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட முன்னாள் அவைத் தலைவர் சி.வி.எம்.அ. பொன்மொழி அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவுநாளான இன்று காஞ்சிபுரத்தில் 2 இடங்களில் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. உணவு வழங்குகிறார்.

முன்னாள் அமைச்சர், செந்தமிழ்ச் செல்வர் சி.வி.எம். அண்ணாமலை அவர்களின் மகனும், கழக கொள்கைப் பரப்புச் செயலாளரும், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினருமான சி.வி.எம்.பி.எழிலரசனின், தந்தையுமான, காஞ்சி தெற்கு மாவட்ட முன்னாள் அவைத் தலைவருமான நினைவில் வாழும் சி.வி.எம்.அ.பொன்மொழி அவர்களின் எட்டாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, இன்று (31.08.2025) காலை 08.00 மணியளவில், காஞ்சிபுரம், இரயில்வே சாலையிலுள்ள காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினரின் இல்லத்தில் அன்னாரின் திருவுருவப் படத்திற்கு, மாலை அணிவித்து நினைவஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

அந்நிகழ்வில், மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, வட்ட மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள், கழக அணிகளின் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், ஒன்றியக்குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்றத் தலைவர்கள் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், ஏராளமான கழகத்தினர் (ம) சி.வி.எம். குடும்பத்தி னர் கலந்துக் கொண்டு நினைவஞ்சலி செலுத்துகின்றனர்.

அதனைத்தொடர்ந்து, காலை 11.00 மணியளவில் காஞ்சிபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை எதிரிலும், 11.30 மணியளவில் பூக்கடை சத்திரம் அருகிலும் ஏழை, எளியோருக்கு பசியாற்றும் நிகழ்வு நடைபெறவுள்ளது. குறிப்பு : காலை சிற்றுண்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருவல்லிக்கேணி பகுதி முன்னாள் செயலாளர்
க.வே.செழியன் அவர்கள்
தோற்றம் : 10.02.1957 ■ மறைவு : 31.08.2022
மூன்றாம் ஆண்டு
நினைவு அஞ்சலி
கழக இளைஞரணி செயலாளர் -
மாண்புமிகு துணை முதல்வர்
உதயநிதி ஸ்டாலின்
நே.சிற்றரசு MC
சென்னை மேற்கு மாவட்ட செயலாளர்
தயாநிதி மாறன் MP
மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்
வீ.பி.பொன்னரசு | டாக்டர் R.கபேர்கான் | ஆர்.என்.துரை | வி.என்.ராஜன்
ப.பிரகாஷ் | வே.கமலாசெழியன் | ரவிராஜ்குமார் | ஏ.விஜயராஜ்
இ.இளம்பாரதி | M.K.ஆனந்த் | ம.தயாநிதி | K.திருநாவுக்கரசு | C.தினகரன்
R.பத்மாவதி | ICF.M.சங்கர் | ஜெ.விஜயகுமார் | க.வே.மோகன் | என்.ரவி
K.பிரபு | K.G.செந்தில்குமார் | S.சசிகுமார்
என்றும் உங்கள் நினைவுடன்
ARP.M.காமராஜ் MC
திருவல்லிக்கேணி பகுதி செயலாளர்
பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி துணை தலைவர்
M.பிரேம்ராஜா M.Com.,LLB.,
திருவல்லிக்கேணி பகுதி பொருளாளர்
டாக்டர். ARP.MD.ஸ்ரீனிவாசன்
மருத்துவர் அணி அமைப்பாளர் - சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி




திருவல்லிக்கேணி பகுதி தி.மு.க